The Tamil Nadu Dr.Ambedkar Law University
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்



# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சீர்மிகு சட்ட பள்ளி நடத்தும் தமிழ் வழக்கு வாதப் போட்டி **2024**



**தகுதி, கால் மற்றும் அறை இறுதி சுற்றுகள் :**

3-4 பிப்ரவரி, 2024- மெய்நிகர்

**இறுதி சுற்று:**

17 பிப்ரவரி, 2024- நேரலை

**In Partnership with LEY CRAFT**



Ley Craft

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை

தமிழ் வழக்கு வாதப் போட்டி 2024

1) குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியான பாண்டிய நாட்டில், ஒரு தனித்துவமான சட்டக் கதை வெளிப்படுகிறது.

2) கடந்த 1998 ஆம் ஆண்டில், திரு மற்றும் திருமதி தேவகிரி கிருஷ்ணசுவாமி அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு “கிரிஷாந்த்" என்று பெயரிட்டனர். கிரிஷாந்த் தனது பதின்ம வயது பருவத்தில் கல்வியில் சிறந்து விளங்கியவராகவும், பன்முகத் திறமை கொண்டவராகவும் இருந்தார், அவர் பெண்களுடன் பழகுவதையும் சில பெண்பால் பண்புகளை வெளிப்படுத்தினார். இருப்பினும், அவரது இந்த நடத்தையில், அவரது பெற்றோருக்கு, ஒருபோதும் மகிழ்ச்சி தரக்கூடியதாக அமையவில்லை.

3) இதை அறிந்த கிரிஷாந்த் திடீரென்று தன்னுடைய 19 வயதில், தனது உடைமைகளை ஒரு பையில் எடுத்துக்கொண்டு, தனது பெற்றோர்களுக்கு தெரியாமல் தனது வீட்டை விட்டு வெளியேறினார். பின்பு வடநாடு என்னும் மாநிலத்தில், பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் அதிக எண்ணிக்கையில் செய்யப்படுகின்றன என அறிந்து அங்கு ரயில் வழி சென்றடைந்தார். அங்கு பணமில்லாமல் தவித்தார்.

4) பணமில்லாமல் தவித்த காரணத்தினால், தனது வீட்டில் இருந்து எடுத்துக்கொண்டு வந்த அவரது அம்மாவின் புடவைகளை அணிந்துக்கொண்டு, ஒப்பனை செய்துகொண்டு, தெருக்களில் சென்று, அறுவை சிகிச்சைக்காகச் சேமிக்கத் தொடங்குகிறார். அவர் இனி "கிரிஷாந்த்" என்று அடையாளம் தென்படாமல் பார்த்துக்கொண்டு, மாறாக "கேஷிகா" என்ற பெயர் மூலம் சமுதாயத்தில் சமூக அங்கீகாரம் பெற்றார். அங்கு, அவள் தன் சமூக

மக்களைக் கண்டாள். கேஷிகாவின், பொதுவான மொழி அடையாளம் அவளை ஸ்ருதி மற்றும் பானுவுடன் தோழியாக்கியது. மேலும் அவர்கள் மூவரும் தங்களின் நிதித் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு, சாலைகளில் சம்பாதிக்க தொடங்கினார்கள். பின்பு சம்பாதிக்கும் மொத்தத் தொகையையும் ரொக்கமாக மூன்று நண்பர்களிடையே சமமாகப் பிரித்துக் கொள்ள ஒருமனதாக முடிவு செய்தார்கள்.

5) சிறிது காலம் பணத்தை சேமித்த பிறகு, கேஷிகா பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்துகொண்டு, பாண்டிய நாட்டிற்குச் செல்லத் தயாரானார். 2020ஆம் ஆண்டு மார்ச் 08 அன்று, பானு கேஷிகாவின் உடைமைகளை எடுத்துச் செல்ல தயார்செய்வதற்கு உதவியபோது, கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான பணப்பையை பானு கண்டார். அறுவைசிகிச்சையில் தனது முழு சேமிப்பையும் செலவழித்த பிறகு அத்தகைய தொகை ஒருபோதும் கேஷிகாவிடம் இருக்க சாத்தியமில்லை என்பதை உணர்ந்த பானு, கேஷிகாவிடம் தொகையைப் பற்றி கேட்டார்.

6) கேஷிகா கேள்வியைத் மறுக்க முயன்றாள். இருப்பினும், தொடர்ந்து வற்புறுத்தியதன் பேரில், அவர் தனது சம்பாத்தியத்தை முழுதாக ஒருபோதும் பிரிப்பதற்காக கொடுக்கவில்லை என்றும், ஒரு பகுதியை மட்டும் இந்த வழியில் சேமித்ததாகவும் கூறினார். இதை பானு ஷ்ருதியிடம் கூறியபோது, இப்போது தான் தனது அறுவை சிகிச்சை முடித்திருக்கிறாள் என்றும் அவள் தற்போது தங்களிடமிருந்து விடை பெறுகிறாள் என்பதை கருத்தில் கொண்டு, ஷ்ருதி இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

7) இருப்பினும், பானு, கேஷிகாவின் சேமிப்பில் தன்னிடம் இருந்த பங்கில் மூன்றில் ஒரு பங்கைக் கொடுக்க வேண்டினார். அதை தர மீறினால், கேஷிகாவை வெளியேற விடமாட்டேன் என்றும் கூறினார். வாய்வார்த்தைத் தீவிரமானதால், ஒருவரையொருவர் தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டனர். மேலும், ஸ்ருதி பானுவை

சமையலறைக் கத்தியைக் காட்டி மிரட்டத் தொடங்கினாள், பின்னர், கேஷிகா பானுவை ரொட்டி ரோலரால் (தடிமனான மரக் குச்சி) முதுகில் தாக்கி இருவரும் அந்த இடத்தை விட்டு வெளியேறினார்கள்.

8) ஷ்ருதியை வடநாட்டில் விட்டுவிட்டு பாண்டிய நாட்டுக்கு ரயிலில் சென்றாள் கேஷிகா. வடநாட்டில் தான் செய்த குற்றங்களுக்கு அஞ்சிய அவர், பாண்டிய நாடு கந்தபொய்கை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்ய முடிவு செய்தார். இந்த மனுவை பரிசீலித்து நீதிமன்றம் முன்ஜாமீன் மனுவை அனுமதித்தது.

9) எதிர்பார்த்தது போலவே, பானு வடநாடு ஷிவலொக் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஸ்ருதி மற்றும் கேஷிகா மீது வார்த்தைப் துஷ்பிரயோகம், குற்றமுறு அச்சுறுத்தல் மிரட்டல் மற்றும் மனமுவந்து காயப்படுத்தியதற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, ஸ்ருதியை போலீசார் கைது செய்தனர். ஸ்ருதியின் மருத்துவப் பரிசோதனை காவல் நிலையத்தில் செய்யப்பட்டது. பின்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார். பின்பு ஸ்ருதியின் வழக்கறிஞர் ஒரு பிணை மனுவை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு தாக்கல் செய்தார். அந்த மனு அரசு தரப்பு ஆட்சேபனையின் பேரில் தள்ளுபடிசெய்யப்பட்டது. பின்பு ஸ்ருதி அந்த தள்ளுபடியை எதிர்த்து அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனுவைத் தாக்கல் செய்தார். பிணையை அமர்வு நீதிமன்றம் வழங்கியது.

10) அதே போல், கேஷிகா பாண்டிய நாட்டில் கைதுக்கு முன் ஜாமீன் வைத்திருக்கிறார். பின்பு இருவரின் பெயரில், வடநாடு ஷிவலொக் காவல்நிலையத்தால் தாக்கல்செய்யப்பட்ட இறுதியறிக்கை இருவருக்கும் சார்வு செய்யப்பட்டது. கிரைந்தாவன் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஸ்ருதியின் வழக்கு விசாரணை தொடங்கும் நிலையில், விசாரணையை பிரிக்க வேண்டியதாயிற்று. வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும் போது, ஸ்ருதி வழக்கின் விசாரணைக்கு ஆஜர்

ஆகாததால் குற்றவியல் நீதித்துறை நடுவரால் பிடிஆணை பிறப்பிக்கப்பட்டு, கைதும் செய்யப்பட்டார். பின்பு அவர் விசாரணை கைதியாக வழக்கு விசாரணைக்கு ஆஜரானபோது, ஸ்ருதி கழிவறையைப் பயன்படுத்த விரும்பினார். ஒரு போலீஸ் அதிகாரியுடன், அவள் ஆண் கழிவறையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டாள், அதை அவள் செய்ய மறுத்து, பின்னர் அழைத்து வரப்பட்டாள்.

11) கேஷிகாவும் ஸ்ருதியும் தங்கள் வழக்கறிஞரிடம் உரையாடி, குமரி கண்டம் உச்ச நீதிமன்றத்தை அணுக முடிவு செய்தனர்.

குமரி கண்டம் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை பிப்ரவரி 2, 2022 அன்று பட்டியிலட்டு, இந்த பின்வரும் கேள்விகளை வழக்கிற்காக வகுத்தது:

1) இந்த மனு இந்த மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் பராமரிக்கப்படத்தக்கதா?

2) குற்றம்சாட்டபட்டவர்களின் அடிப்படை உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளதா?

3) பாண்டிய நாடு கந்தபொய்கை அமர்வு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன் ஜாமீன், வடநாடு, ஷிவலொக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்குத் தொடர்பாகப் பயன்படுத்தப்பட முடியுமா அல்லது நிலைக்கத்தக்கதா?

குறிப்பு: குமரி கண்டத்தின் சட்டங்கள் இந்தியாவின் சட்டத்திற்கு இணையானவை.

வடநாட்டின் சட்டங்கள் தமிழ் நாட்டின் சட்டத்திற்கு இணையானவை.